# ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி

## பதினோராம் திருமொழி - தாமுகக்கும் தலைவி திருவரங்கன் செய்கைகு மனம் பொறாது தாய்மார் முதலியோரை நோக்கி வருந்திக் கூறுதல்

** தாம் உகக்கும் தம் கையில் * சங்கமே போலாவோ? *
யாம் உகக்கும் என் கையில் * சங்கமும் ஏந்திழையீர்! **
தீ முகத்து நாகணை மேல் * சேரும் திருவரங்கர் *
ஆ!முகத்தை நோக்காரால் * அம்மனே! அம்மனே! 1

எழில் உடைய அம்மனைமீர்! * என் அரங்கத்து இன்னமுதர் *
குழல் அழகர் வாய் அழகர் * கண் அழகர் ** கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் * எம்மானார் * என்னுடைய
கழல் வளையைத் * தாமும் கழல் வளையே ஆக்கினரே 2

** பொங்கோதம் சூழ்ந்த * புவனியும் விண்ணுலகும் *
அங்காதும் சோராமே * ஆள்கின்ற எம்பெருமான் **
செங்கோல் உடைய * திருவரங்கச் செல்வனார் *
எங்கோல் வளையால் * இடர் தீர்வர் ஆகாதே? 3

மச்சணி மாட * மதிள் அரங்கர் வாமனனார் *
பச்சைப் பசுந்தேவர் * தாம் பண்டு நீர் ஏற்ற **
பிச்சைக் குறை ஆகி * என்னுடைய பெய்வளை மேல் *
இச்சை உடையரேல் * இத்தெருவே போதாரே? 4

பொல்லாக் குறள் உருவாய்ப் * பொற்கையில் நீர் ஏற்று *
எல்லா உலகும் * அளந்து கொண்ட எம்பெருமான் **
நல்லார்கள் வாழும் * நளிர் அரங்க நாகணையான் *
இல்லாதோம் கைப்பொருளும் * எய்துவான் ஒத்துளனே 5

கைப்பொருள்கள் முன்னமே * கைக்கொண்டார் * காவிரி நீர்
செய்ப் புரள ஓடும் * திருவரங்கச் செல்வனார் **
எப்பொருட்கும் நின்றார்க்கும் * எய்தாது * நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார் * என் மெய்ப்பொருளும் கொண்டாரே 6

உண்ணாது உறங்காது * ஒலி கடலை ஊடறுத்து *
பெண் ஆக்கை ஆப்புண்டு * தாம் உற்ற பேதெல்லாம் **
திண்ணார் மதிள் சூழ் * திருவரங்கச் செல்வனார் *
எண்ணாதே தம்முடைய * நன்மைகளே எண்ணுவரே 7

** பாசி தூர்த்துக் கிடந்த * பார் மகட்கு * பண்டொரு நாள்
மாசுடம்பில் நீர் வாரா * மானம் இலாப் பன்றியாம் **
தேசுடைய தேவர் * திருவரங்கச் செல்வனார் *
பேசி இருப்பனகள் * பேர்க்கவும் பேராவே 8

கண்ணாலம் கோடித்துக் * கன்னி தன்னைக் கைப்பிடிப்பான் *
திண்ணார்ந்திருந்த * சிசுபாலன் தேசழிந்து **
அண்ணாந்திருக்கவே * ஆங்கவளைக் கைப்பிடித்த *
பெண்ணாளன் பேணுமூர் * பேரும் அரங்கமே 9

** செம்மை உடைய * திருவரங்கர் தாம் பணித்த *
மெய்ம்மைப் பெரு வார்த்தை * விட்டுசித்தர் கேட்டிருப்பர் **
தம்மை உகப்பாரைத் * தாம் உகப்பர் என்னும் சொல் *
தம்மிடையே பொய்யானால் * சாதிப்பார் ஆர் இனியே? 10

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

---